THE NEW INDIAN EXPRESS

PAGE NO: 05

DATE: 25.11.2023

# Prof Tharanikkarasu assumes charge as V-C of Pondicherry varsity


**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

DIRECTOR of Pondicherry University, professor K Tharanikkarasu, took over as vice-chancellor (in-charge) of Pondicherry University after professor Gurmeet Singh demitted office on November 23 following the completion of his tenure.

According to an official release, Singh, a renowned academic administrator, had been serving as the V-C of Pondicherry University since 29 November 2017, and his extended tenure officially came to an end on November 23,2023.

Singh acknowledged and thanked the statutory officers, faculty members, staff, students and all stake-holders for extending full support during his tenure as V-C, stated the release.

In the meantime, the university's Executive Council (EC) has constituted a two-member committee to form a search panel for the appointment of a new vice-chancellor as per the provisions of Pondicherry University Act.



Gurmeet Singh, a renowned academic administrator, had served as the V-C of Pondicherry University from 29 November, 2017, to November 23, 2023 | EXPRESS

DINAMALAR

PAGE NO : 03 DATE : 25.12.2023

# விடைப்பெற்றார் துணை வேந்தர்

**புதுச்சேரி, நவ. 25–**

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து பொறுப்பினை ஒப்படைத்து விடை பெற்றார்.

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கடந்த 2017ம் ஆண்டு நவம்பர் 29ம் தேதி பொறுப்பேற்றார். அவருடைய பதவிக்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

அதையடுத்து துணை வேந்தர் பொறுப்பினை மூத்த அதிகாரியான பல்கலைக்கழக ஆய்வு பிரிவு இயக்குநர் தரணிக் கரசுவிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து தன்னுடைய பணிக்காலத்தில் ஒத்துழைப்பு தந்த பேராசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் துணைவேந்தர் குர்மீத் சிங் நன்றி தெரிவித்து, விடைபெற்றார்.



புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து இயக்குநர் தரணிக்கரசுவிடம் பொறுப்பினை ஒப்படைத்து விடைபெற்றார்.

HINDU TAMIL

PAGE NO: 03 DATE: 25.12.2023

### புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர்

# குர்மீத் சிங்கின் பதவி நீட்டிப்பு நிறைவு

## பொறுப்பு துணைவேந்தரானார் தரணிக்கரசு

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் குர்மீத் சிங் கடந்த 29 நவம்பர் 2017 அன்று பொறுப்பேற்றார். கடந்தாண்டு நவம்பர் 23-ம் தேதி அவரது பதவிக்காலம் நிறைவடைந்தது. அதையடுத்து புதிய துணைவேந்தரை நியமிக்க புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் செயற்குழுவில் உள்ள இருவரின் பெயரை பரிந்துரைக்க மத்திய கல்வி அமைச்சகம் அறிவுறுத்தியது.

இச்சூழலில் குர்மீத் சிங்கின் பதவிக்காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்து மத்திய கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது. இக்காலத்தில் புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தின் தரவரிசை கடுமையாக சரிந்தது. மேலும் பலவித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. நீதிமன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டன.

இந்நிலையில் நடப்பு கல்வியாண்டில் புதிய கல்விக்கொள்கையை பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளில் நடைமுறைக்கு கொண்டு வந்தார். இச்சூழலில் பேராசிரியர் குர்மீத் சிங்கின் நீட்டிக்கப்பட்ட பதவிக்காலம் நவ. 23ம் தேதி முடிவடைந்தது. அவருக்கு மத்திய அரசு மீண்டும் பதவிநீட்டிப்பு அளிக்கவில்லை. இதனால் பேராசிரியர் குர்மீத் சிங் தனது பதவியிலிருந்து விலகியவுடன், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இயக்குநர் பேராசிரியர் கே. தரணிக்கரசுவிடம் அவர் பொறுப்பை ஒப்படைத்தார். தற்போது பொறுப்பு துணைவேந்தராக தரணிக்கரசு செயல்படுவார் என்று பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.



↑ புதிய துணைவேந்தர் தரணிக்கரசுவிடம் வாழ்த்து தெரிவித்து, பொறுப்புகளை ஒப்படைக்கும் குர்மீத் சிங்.

அடுத்த துணைவேந்தர் நியமனம் எப்போது என்று பல்கலைக்கழக தரப்பில் விசாரித்தபோது, “புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் நிர்வாகக்குழு கூட்டம் நடந்தது. புதுச்சேரி பல்கலைக்கழக சட்ட விதிகளின்படி புதிய துணைவேந்தரை நியமிக்க தேடல் குழுவை அமைக்க இரண்டு பிரதிநிதிகள் நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள துணைவேந்தர் பதவிக்கு விண்ணங்களை கோரும் அறிவிப்பு விரைவில் வெளியாகும்” என்று தெரிவித்தனர்.

DAILY THANTHI

PAGE NO: 09 DATE: 25.11.2023



புதுச்சேரி பல்கலைக்கழக

# துணை வேந்தராக தரணிக்கரசு நியமனம்

புதுச்சேரி, நவ.25–

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பணியாற்றி வந்தவர் குர்மீத் சிங். இவரது பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், பல்கலைக்கழகத்தின் இயக்குனர் பேராசிரியர் தரணிக்கரசு பொறுப்பு துணை வேந்தராக நியமிக்கப்பட்டு உள்ளார். அவர் துணை வேந்தராக நேற்று பதவி ஏற்றுக்கொண்டார். அவரிடம் பல்கலைக்கழக துணை வேந்தர் பொறுப்பை குர்மீத் சிங் ஒப்படைத்து, வாழ்த்து தெரிவித்தார்.

துணை வேந்தராக பதவி ஏற்ற தரணிக்கரசு, புதுவை பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறை பேராசிரியராக 17 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மேலும் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர், பதிவாளர் (பொறுப்பு) ஆகிய முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

முன்னதாக நடந்த பல்கலைக்கழக நிர்வாகக்குழு கூட்டத்தில், பல்கலைக்கழக சட்டங்களின்படி புதிய துணை வேந்தரை நியமிப்பதற்கான தேடல் குழுவை அமைக்க 2 பேரை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டு உள்ளது. எனவே துணை வேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிகிறது.

DINAKARAN

PAGE NO : 14

DATE: 25.11.2023

தினகரன் புதுவை

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# புதிய துணைவேந்தர் பொறுப்பேற்பு

புதுச்சேரி, நவ. 25: புதுவை பல்கலைக்கழகம் மக்கள் தொடர்பு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்:

புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் குர்மீத் சிங் கடந்த 2017ம் ஆண்டு நவம்பர் மாதம் பொறுப்பேற்றார். அவரின் பதவிக் காலம் தற்போது முடிவடைந்தது. இந்நிலையில் புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக (பொறுப்பு) பேராசிரியர் தரணிக்கரசு பதவியேற்று கொண்டார்.

தொடர்ந்து நிர்வாக குழு கூட்டத்தில் புதுவை பல்கலைக்கழக சட்டங்களின் படி புதுவை பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கான தேடல் குழுவை அமைப்பதற்காக 2 பிரதிநிதிகளை நியமிக்க பரிந்துரைத்துள்ளது. மேலும் காலியாக உள்ள துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.



புதுவை பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக (பொறுப்பு) பேராசிரியர் தரணிக்கரசு பதவியேற்று கொண்டார்.